

உ

ஸ்ரீ அம்மன் துணை

சரணம் துர்கையே
அம்மா
சரணம் துர்கையே

# அருள்மிகு அம்மன் வழிபாடு

ESSENTIAL PUBLICATIONS Estd. 1975



தனம் தரும் கல்வி தரும்
ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும்
நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும்
நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே!

உ







சரணம் துர்க்கையே! அம்மா, சரணம் துர்க்கையே!

# அம்மன் வழிபாடு

எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ் விலை ரூ. 22

# உள்ளடக்கம்


ஸ்ரீ அம்பாள் வாழ்த்து .................................... 3
திருமந்திரம் ................................................ 3
ஸ்ரீ சரஸ்வதி வாழ்த்து .................................... 4
ஸ்ரீ மீனாக்ஷி ஸ்துதி .......................................... 5
அன்னை ஸ்ரீ துர்க்கா அஷ்டகம் ......................... 6
அம்பிகை ....................................................... 9
ஸ்ரீ துர்க்கா தேவி - துக்க நிவாரண அஷ்டகம் . 10
துர்க்கா சரணம்............................................. 13
ஜெய ஜெய தேவி............................................ 14
மதுரை மீனாக்ஷி 108 போற்றி ........................ 16
கலைவாணி நின் கருணை ............................ 23
மாணிக்க வீணை........................................... 24
ஸ்ரீ கஷ்ட நிவாரணி அஷ்டகம் ........................ 25
திருவிளக்கு பூஜை ....................................... 30
மங்களம் ...................................................... 32






# ஸ்ரீ அம்பாள் வாழ்த்து

தனம் தரும் கல்வி தரும்
ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும்
நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே கனம் தரும்
பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!

# திருமந்திரம்

ஸர்வ சொரூபே ஸர்வே ஸே
சர்வ சக்தி ஸமன் விதே
பயேப்ய ஸ்தாகினோ தேவி
துர்க்கே தேவி நமோஸ்துதே



# ஸ்ரீ சரஸ்வதி வாழ்த்து

தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என் தாயே கலைவாணி ஏகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே என் வாக்கில் குடியிரும்மா
என் நாவில் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலாசனத்தால் காப்பாய் என் பெற்றவளே
என் குரலில் குடியிருந்து கொஞ்சடி என் பெற்றவளே
என் குரலில் கொஞ்சடி என் பெற்றவளே
என் நாவு தவறாமல், நல்லோசை தாருமம்மா
துர்க்கையம்மன் தன் நாமத்தை மனமகிழ்ந்து நான் பாட
சரியாக என் நாவில் தங்கி குடியிரும்மா புலியகுளம்
துர்க்கையம்மன் தன் பாதத்தை கை தொழுது நான் பாட
இன்னல் ஏதும் இல்லாமல் அருள் கூர்ந்து பாருமம்மா



# ஸ்ரீ மீனாக்ஷி ஸ்துதி

அம்மை காமாக்ஷியே கருணா கடாக்ஷியே
அரிய மதுரையாளும் மீனாக்ஷியே
நம்பும் அடியார்கள் கண்ணுறும் காக்ஷியே
நாகை யதனில் வாழும் நீலாய தாக்ஷியே
சம்பு மோகித்திடும் காசி விசாலாக்ஷியே
சாலத் திகழும் ஆரூர் கமலாக்ஷியே
அடியாரைக் கரையேற்றும் அகிலாண்ட நாயகி
கும்பிட்டு உனதடிக குருகிப் பணிந்தோம்
கௌரியே எழுந்தருள் வாயே





# அன்னை ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீங்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
உலகை ஈன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எங்கள் உயிரை காப்பவள்
நிலவுல் நின்றவள் துர்க்கா நித்தையானவள்
நிலவி நின்றவள் என்றும் நிதியும் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
செம்மையானவள் துர்க்கா ஜெபமுமானவள்
அம்மையானவள் அன்புத்தந்தையானவள்



இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத்தோணியானவள்
அன்பு உற்றவர் துர்க்கா அபய வீடவள
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே



சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலிமாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் எம்மை தேடிவருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே எம்மைக் காக்கும் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர சுகுண துர்க்கையே



அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே
சரணம் துர்க்கையே அம்மா சரணம் துர்க்கையே

## அம்பிகை

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூபுரஞ்
சிலம்பும் அடிகள் போற்றி

(திருவிளையாடற் புராணம்)



# ஸ்ரீ துர்க்கா தேவி – துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மதபாணியளே
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி

கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி தாரெளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எங்குலத் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி



தண தண தந்தன தவிலொழி முழங்கிட தண்மணி நீ வருவாய்
கண கண கங்கணகதிர் ஒளி வீசிட கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிட பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்ச நல் பாணியளே
கொஞ்சிடும் குமரனை குணமிகு வேலனை கொடுத்த நல் குமரியளே
சங்கடம் தீர்திடச் சமரது செய்த நல் சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி

எண்ணிய படி நீ யருளிடவருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய் பல்கிட அருளிடுவாய்
கண்னெலி யதனால் கருணையே காட்டி கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி



இடர் தரும் தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர் தரும் அமுதே சுருதிகள் கூறிச் சுகமதைத் தந்திடுவாய்
படர்தரும் இருளில் பரிதியாய் வந்து பலவிணை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி

ஜெய ஜெய பாலா சாமுண்டீஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி -காமாக்ஷி





# துர்க்கா சரணம்

சரணம் துர்க்கா சரணம் துர்க்கா என்று பாடுவோம்
இராகு கால பூஜை தனில் ஒன்று கூடுவோம்
காலமெல்லாம் அன்னை அவள் அருள் துணை நமக்கு உண்டு
கண்ணீரை துடைத்திடவே கருணை மனம் நமக்கு உண்டு
கவலை எல்லாம் மாறிவிடும் கடை கண்ணால் அவள் பார்த்தாள்
கண் மணியாம் நம் தாயின் கருணை அருளை நாம் பெறவே
- சரணம்

ஏழைகளின் அன்னையவள் எங்கள் குலம் காக்கும் மகள்
எங்கள் வயிர் நிறைந்திடவே எங்களுக்கு அன்னம் அவள்
பாவத்தை தீர்ப்பவளாம் பக்க துணை இருப்பவளாம்
ஜாதி மதம் பாராமல் காத்து வரும் அன்பு அவளை
- சரணம்



# ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
துர்க்கையம்மனைத் துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும் சர்வ மங்களம் கூடும்
(ஜெய ஜெய)
பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றிவரும்
பகைவிரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே
ஆதிசக்தி இவள் பெரியவளே



ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய)
சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும்
வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அம்மா
தங்க கைகளில் தாங்கி நிற்பாள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நிற்பாள்
மங்கள வாழ்வையும் தந்திடுவாள்
மங்கையர்க்கரசியும் இவளே
அங்கையர்க்கண்ணியும் இவளே
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்!



# மதுரை ஸ்ரீமீனாக்ஷி அம்மன் 108 போற்றி

ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அறம்வளர்க்கும் அம்மையே போற்றி
ஓம் அரசிளங்குமரியே போற்றி
ஓம் அப்பர் பிணிமருந்தே போற்றி
ஓம் அமுதநாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய் அரசியே போற்றி 10
ஓம் ஆறுமுகம் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆனந்த வல்லியே போற்றி



ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
ஓம் இமயத்தரசியே போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈஸ்வரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி 20
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண் திசையும் வென்றோய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயம் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்றோர்க்கு இனியோய் போற்றி
ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி 30



ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணி குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணை ஊற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி
ஓம் கனகாம்பிகையே போற்றி
ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக்கு இனியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி 40
ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
ஓம் கூடல் கலாப மயிலே போற்றி
ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி



ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி 50
ஓம் சிவயோக நாயகியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
ஓம் சேனைத்தலைவியே போற்றி
ஓம் சொக்கர் நாயகியே போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
ஓம் ஞானாம்பிகையே போற்றி
ஓம் ஞானப்பூங்கோதையே போற்றி 60
ஓம் தமிழர்குலச் சுடரே போற்றி
ஓம் தண்டமிழ்த்தாயே போற்றி



ஓம் திருவுடை யம்மையே போற்றி
ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி
ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி
ஓம் தேன்மொழியம்மையே போற்றி 70
ஓம் தையல்நாயகியே போற்றி
ஓம் நற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி
ஓம் நீலாம் பிகையே போற்றி
ஓம் நீதிக்கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
ஓம் பழமறையின் குருந்தே போற்றி



ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி 80
ஓம் பவளவாய்க்கிளியே போற்றி
ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி
ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டியர் தேவியே போற்றி
ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன் மயிலம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி 90
ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மழலைக்கிளியே போற்றி
ஓம் மனோன்மணித் தாயே போற்றி



ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மீனவர்க்கோன் மகளே போற்றி
ஓம் மீனாட்சியம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி 100
ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
ஓம் யாழ்மொழியம்மையே போற்றி
ஓம் வடிவழகம்மையே போற்றி
ஓம் வேலனுக்கு வேல்ஈந்தோய் போற்றி
ஓம் வேதநாயகியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
ஓம் அம்மையே அம்பிகையே போற்றி
ஓம் அகிலம் ஆளவந்தாய் போற்றி! போற்றி!! 108

✦✧✦



# கலைவாணி நின் கருணை

கலைவாணி நின் கருணை தேன் மழையே
விளையாடும் என் நாவில் செந்தமிழே
அலங்கார தேவதையே வனிதாமணி
இசைக்கலையாவும் தந்தருள்வாய் கலைமாமணி (கலை
மரகத வளைக்கரங்கள் மாணிக்க வீணை தாங்கும்
அருள் ஞானகரம் ஒன்றில் ஜெய மாலை வழங்கி
ஸ்ருதியோடு லயபாவஸ்வரராக ஞானம்
சரஸ்வதி மாதாவும் விணையில் எழும் நாதம் (கலை
வீணையில் எழும் நாமம் தேவி உன் சுப்ரபாதம்
வேணுவில் வரும் நாதம் வாணி உன் சக்ரபாதம்
வானகமும் வையகமும் உன் புகழ் பாடும்
வேண்டினேன் உன்னைப்பாட தருவாய் சங்கீதம் (கலை

ஊஎஊ



# மாணிக்க வீணை

மாணிக்க வீணை யேந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்துப் பாட வந்தோம் - அம்மா
பாட வந்தோம் அம்மா பாட வந்தோம்
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ நலம் தருவே நீ - அம்மா (மாணிக்க)
நா மணக்க பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்க பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய் (மாணிக்க)
வெள்ளை தாமரையில் வீற்றிருப்பாய் எங்கள்
உள்ள கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ள மில்லாமல் தொழும் அன்பருக்கே - என்றும்
அள்ளி அறிவை தொழும் அன்பருக்கே - என்றும்
அள்ளி அறிவை தரும் அன்னையும் நீ
வாணி சரஸ்வதி மாதவி பாரதி வாஹதீஸ்வரி மாலினி



காணும் பொருளில் தோன்று கலைமணி
வேண்டும் வரம் தருவே நீ
நான்மகன் நாயகி மோகன ரூபிணி
நான் மறை போற்றும் தேவி நீ
வானரமுதே தேனருள் சிந்தும் ராக மனோகரி கல்யாணி
நலம் தருவே நீ அம்மா (மாணிக்க)

✦✧✦

## ஸ்ரீ கஷ்ட நிவாரணி அஷ்டகம்

(அயிகிரி - நந்தினி மெட்டு)

1) குங்கும நாயகி குலம்மகிழ் நான்முகி
குவலய தேவியளே!
பங்கய லோசனி பார்புகழ் யாமினி
பனிமலை அரசியளே
மங்கல ரூபிணி மனமகிழ் வாசினி



மாசினைக் களைபவளே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி

2) சஞ்சலம் போக்கிடும் சங்கரி சாம்பவி
சாந்த தயாபரியே
எஞ்சிய நாளிலும் ஏற்றமாய் வாழ்ந்திட
எங்களுக் கருள்புரிவாய்
தஞ்சமென் றுன்னையே சகலமும் வேண்டுவேன்
தாரணி காப்பவளே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி

3) எத்துனை இடர்கள எத்துனை தடைகள்
எண்ணி லடங்காமல்
அத்துனை இடர்களும் அத்துனை தடைகளும்
அவசியம் களைந்திடுவாய்



எத்துனை இனியே என்று கலங்கிடும்
எங்களின் துணை நீயே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி
4) சிந்தையில் என்றுமே சிரித்திடும் உன்முகம்
சிக்கென இருந்திடுமே
விந்தையிலும் நல்விந்தையே உன்செயல்
விரைவினில் புரிந்திடுவாய்
எந்தையும் தாயும் எம்குலம் யாவும்
உந்தனால் தழைத்திடுமே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி
5) அற்புத வடிவே ஆனந்த நிலையே
அகிலாண் டேஸ்வரியே
பொற்பதம் நற்பதம் பற்றினேன் நின்பதம்



பித்தனின் பாதியளே
கற்பத் தருவே காத்திடும் உருவே
கற்பகக் காஞ்சனையே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி

6) வருவாய் வருவாய் வான்புகழ் நாயகி
வறுமையைப் போக்கிடவே
தருவாய் தருவாய் வருவாய் தருவாய்
சீர்மிகு வழியினிலே
திருவாய் மலர்வாய் ஒருவாய் உணவும்
தினமும் கிடைத்திடவே
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி

7) மலைமகள் கலைமகள் மாதவன் அலைமகள்
வடிவுடை துர்க்கையளே

இலைமறை காயாய் இருந்திடும் நோய்களை
இனி இ(ல்)லை யாக்கிடுவாய்
நிலையாய் உன்னை நான் நினைத்தே வணங்கிடும்
நிலையினைத் தந்திடுவாய்
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி

8) ஜெயஜெய வாரணி கஷ்ட நிவாரணி
ஜெய ஜெய நாரணியே
ஜெயஜெய மாலினி ஜெகம் புகழ் சீலினி
ஜெய ஜெய சூலினியே!
ஜெயஜெய மங்களம் ஜெயஜெய மங்களம்
ஜெயஜெய பகவதியே!
ஜெயஜெய ஈஸ்வரி ஜெய ஜெகதீஸ்வரி
ஜெயம் தரும் தேவி நீ காமாக்ஷி!

✦✧✦



# திருவிளக்கு பூஜை

திருவிளக்கே திருவிளக்கே
தேவி பராசக்தி திருவிளக்கே
தேவியின் வடிவே திருவிளக்கே
தேவியே உனக்கு நமஸ்காரம்
இருளை அகற்றும் திருவிளக்கே
இன்பம் அளிக்கும் திருவிளக்கே
எங்கும் ஒளிதரும் திருவிளக்கே
லக்ஷ்மி உனக்கு நமஸ்காரம்
மங்கள ஜோதியாம் திருவிளக்கே
மாலையில் ஒளி தரும் திருவிளக்கே
காலையில் ஒளிதரும் திருவிளக்கே
சரஸ்வதி உனக்கு நமஸ்காரம்
திருமகள் வடிவே திருவிளக்கே
தேவரும் பணியும் திருவிளக்கே



தெள்ளிய ஜோதியே திருவிளக்கே
சாரதே உனக்கு நமஸ்காரம்
அஷ்டலக்ஷ்மி வடிவே திருவிளக்கே
ஆனந்த நர்த்தினி திருவிளக்கே
ஆலய பூஷணி திருவிளக்கே
ஆதிபராசக்தி நமஸ்காரம்
பாக்கிய லக்ஷ்மியாம் திருவிளக்கே
பக்தியை அளித்திடும் திருவிளக்கே
பதவியைத் தந்திடும் திருவிளக்கே
பவானி உனக்கு நமஸ்காரம்
ஜெகமெல்லாம் விளங்கும் திருவிளக்கே
ஜெகதீஸ்வரி வடிவே திருவிளக்கே
அழகை அளிக்கும் திருவிளக்கே
அம்மா உனக்கு நமஸ்காரம்
சௌந்தர்ய ரூபிணி திருவிளக்கே
சந்தான பலம்தரும் திருவிளக்கே



சம்பத்தை அளிக்கும் திருவிளக்கே
சக்தியே உனக்கு நமஸ்காரம்
ராஜ ராஜேஸ்வரிக்கு நமஸ்காரம்

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை
அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்த கோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சபைக்கு மங்களம்
நாமகீத்தனம் பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞானதீபம் ஏற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்க என்று சந்தகம் கொண்டாடுவோம்.















## எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ் வெளியீடுகளில் சில...



















வெளியிட்டோர் : **எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ்** 167, போலீஸ் கந்தசாமி வீதி
ஒலம்பஸ், இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 045 இந்தியா, செல்பேசி : 98422-13782
மின்னஞ்சல் : *veeranathan@yahoo.com*, வலைதளம் : www.veeranathan.com

**விலை ரூ. 22**

ISBN : 978-93-80324-56-2
9 789380 324562